2020 பிப்ரவரி 17]

கல்லூரிகளை ஒட்டுமொத்தமாக அரசுக் கல்லூரிகளாக மாற்றி அறிவித்து, அதனடிப்படையிலே, அரசு நிர்ணயித்திருக்கின்ற கட்டணம் இப்போது வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. வரக்கூடிய கல்வியாண்டிலே அவர் கேட்கின்றபடி, கூடுதலாக வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள் கட்டுகின்ற வகையிலேயும், அதேநேரத்தில் கூடுதல் பாடப் பிரிவுகளையும் மாணாக்கர்களுக்கு வழங்கி, அங்கே மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு வசதி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

31—

காகிதத் தொழிற்சாலை

***51459—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் உள்ள கிராமங்களில் சாகுபடி செய்யப்படும் சவுக்கு மரங்களைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்து, 'மக்கள் பணியே மகேசன் பணி' என்று எண்ணற்ற வரலாற்றுத் திட்டங்களை மாநில மக்களுக்குத் தந்து, மூன்றாண்டுகளில் ஒவ்வொரு நாளையும் வரலாற்றில் இடம் பெறுகின்ற நாளாக மாற்றி, தேசிய விருதுகள் என பல்வேறு விருதுகளைப் பெற்று, மாண்புமிகு அம்மாவின் வழியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவரோடு துணை நிற்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற வேளாண் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற, விவசாயம் செய்கின்ற சவுக்கு மரங்களைப் பயன்படுத்தி, அங்கே புதியதாக ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் என்பது விவசாயத்தை மட்டுமே பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ள மாவட்டமாகும். மக்கள்தொகையில் 75 சதவிகிதம் பேர் விவசாயத்தையே சார்ந்துள்ளனர். அங்கே சுமார் 5.68 இலட்சம் பண்ணைக் குடும்பங்கள் உள்ளன. இதில் 91 சதவிகிதம் பேர், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆவர். மாவட்டத்திலுள்ள கோமுகி, மணிமுத்தாறு, வீடூர் மற்றும் சாத்தூர் அணைகள் மூலம் 53,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. மொத்தமாக, 3,37,000 ஹெக்டேர் நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து நடப்பு ஆண்டு வரை உணவு தானிய உற்பத்தியில் இந்த மாவட்டம்தான் முதன்மை மாவட்டமாக இருக்கிறது. இந்த மாவட்டத்தின் முக்கிய பயிராக கரும்பு, வாழை, நெல் இருந்தாலும், சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததாலும், ஆறுகளில் நீர்வரத்து குறைந்துவிட்டதாலும், நெல்லுக்கு மாற்றுப் பயிராக வறட்சியைத் தாங்குகிற சவுக்குப் பயிரை இங்கே அதிகமாக சாகுபடி செய்து வருகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் சுமார் 30,000 ஹெக்டேர் நிலத்தில் சவுக்கு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு ஆதார விலை நிர்ணயிப்பதைப்போல, சவுக்குக்கு ஆதார விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. எனவே, சவுக்கு மரங்களை வெட்டுகிறபோது, வியாபாரிகள் கேட்கின்ற அடிமாட்டு விலைக்குத்தான் சவுக்கினை விற்க வேண்டிய அவல நிலைக்கு விவசாயிகள் ஆளாக்கப்படுகிறார்கள்.*

2020 பிப்ரவரி 17]

கரூரில் காகிதத் தொழிற்சாலை இருக்கின்ற காரணத்தினால், கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் இருக்கிற வியாபாரிகள் சவுக்கை நல்ல விலைக்கு வாங்குகிறார்கள். அதைப்போல விழுப்புரம் மாவட்டத்தில் குறிப்பாக, எங்கள் மயிலம் தொகுதியில் அதிகமாக உற்பத்தியாகிற சவுக்கைப் பயன்படுத்தி அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமென்றால், நாளொன்றுக்கு 30,000 கன மீட்டர் தண்ணீர் தேவை. நீர்வளம் அதிகம் இருக்க வேண்டும். குறிப்பாக, வருடத்திற்கு 2 இலட்சம் டன் மரக்கூழ் தயாரிக்கத் தேவையான மரங்கள் வேண்டும். கரூரிலும், முண்டிப்பட்டியிலும்* Bagasse*–ல்தான் காகிதத் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுமார் 6 இலட்சம் டன் கரும்புச் சக்கையை* (bagasse) *வாங்கிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய சூழ்நிலை இருக்கிறது. சுமார் 1,000 ஏக்கர் நிலம் வேண்டும்; 2,500 கோடி ரூபாய் முதலீடு வேண்டும்; நாளொன்றுக்கு 30,000 கன மீட்டர் தண்ணீர் வேண்டும்; 6 இலட்சம் டன் கரும்புச் சக்கை வேண்டும்; 2 இலட்சம் டன் மரக்கூழ் தயாரிக்கத் தேவையான மரங்கள் வேண்டும். இந்தக் காரணங்களாலும், அங்கே ஏற்புடைய இடங்கள் இல்லாத காரணத்தினாலும், அங்கே காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதற்கான காரணங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். முழு அளவில் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கான*

சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும்கூட, காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு மூலப்பொருளாக இருக்கிற மரக்கூழ் தயாரிக்கிற தொழிற்சாலையையாவது அங்கே அமைத்தால், அதன் மூலமாக சவுக்கு வியாபாரிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு உதவியாக இருக்கும். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே மயிலம் தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை நிறுவுவதற்காக 770 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் ஓர் உணவு பதப்படுத்தும் பூங்கா, மூன்றில் ஒரு பங்கு இடத்தில்தான் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீதி இடம் அப்படியே பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, அந்த இடத்தைப் பயன்படுத்தி, மரக்கூழ் தயாரிக்கிற தொழிற்சாலையை அமைத்தாலாவது அங்கேயிருக்கிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நீங்கள் மூலக் கேள்வியோடு உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: டெல்டா பிரதேசங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக நெல்லை நீங்கள் கொள்முதல் செய்வதைப்போல, காகிதத் தொழிற்சாலை மூலமாக குறைந்தபட்சம் சவுக்கை கொள்முதல் செய்கிற விற்பனை நிலையங்களையாவது விழுப்புரம் மாவட்டத்தில் அமைத்தால் நலமாக இருக்கும். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தாலுகா மற்றும் திண்டிவனம் தாலுகாவில் கடந்த ஆண்டு சவுக்கை கொள்முதல் செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட 18,000 மெட்ரிக் டன் சவுக்கை நாங்கள் கொள்முதல் செய்திருக்கிறோம். அங்கே 18,000 மெட்ரிக் டன் அளவிற்குத்தான் சவுக்கு விளைகிறது. 2 இலட்சம் டன் அளவிற்கு அங்கே சவுக்கு விளையவில்லை. குறிப்பாக, Debarking செய்துதான் சவுக்கு மரக் கட்டைகளை கரூர் paper plant–க்கும், முண்டிப்பட்டி paper plant–க்கும் கொடுக்க வேண்டும். அந்தமாதிரி சூழ்நிலைதான் இருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய

2020 பிப்ரவரி 17]

திருக்கரங்களால் முண்டிப்பட்டியில் மரக்கூழ் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு 1,500 கோடி ரூபாய் அளவிற்கு திட்டமிடப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. எனவே, 18,000 டன், 20,000 டன் அளவிற்கு வானூர் தாலுகா மற்றும் திண்டிவனம் தாலுகாவில் உள்ள சவுக்கு மரங்களை மரக்கூழ் தயாரிப்பதற்காக Tamil Nadu paper plant *எடுத்துக்கொள்ளும். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அதற்கு 5,575 ரூபாய் என்ற அளவில்* delivery rate *நாங்கள் கொடுக்கின்றோம். இன்னும் இதற்கு* rate*–ஐ உயர்த்திக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மேலும், திண்டிவனம் வட்டம், வெண்பெண்ணையாத்தூர், கொள்ளாறு, பெலாகுப்பம் பகுதிகளில் கிட்டத்தட்ட 571 ஏக்கர் நிலத்தை SIPCOT *கையகப்படுத்தி இருக்கின்றது. புதிய நில எடுப்புச் சட்டத்தின்படிதான் அந்த நில உரிமையாளர்களுக்கு நாங்கள் பணம் கொடுக்கின்றோம். அதற்குக்கூட எங்களுக்கு* Environment Clearance *இப்போது வந்துவிட்டது. அங்கே உடனடியாக தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு இருக்கின்றது. அங்கே* Food Processing Unit *ஒன்று அமையவுள்ளது. அவர்களையும் நாங்கள்* push *செய்து கொண்டிருக்கின்றோம்; எப்படியாவது அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் திண்டிவனத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று என்னிடம் அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கின்றார். இந்தச் சூழ்நிலையில்* NIKE *என்ற* shoe *தயாரிக்கின்ற தொழிற்சாலையை நிறுவுவதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. அவர்களும் அங்கே சென்று அந்த இடத்தைப் பார்த்துவிட்டு வந்துவிட்டார்கள். இதில் 20,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.* Shoe *தயாரிக்கின்ற இந்தக் கம்பெனி முழுவதுமாக* export *சார்ந்த கம்பெனி. இந்த கம்பெனியானது* Taiwan based company. *இந்த கம்பெனி 300 கோடி ரூபாய் அளவிற்கு* invest *செய்து, 250 ஏக்கர் பரப்பில்* SEZ*–ல் தொடங்குவதற்குத் தயாராக இருக்கின்றது. மயிலம் பகுதி, வானூர் பகுதி என்பது ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதி என்பதை வலியுறுத்தி மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்*

[2020 பிப்ரவரி 17

அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, நிச்சயமாக திண்டிவனம் தாலுகாவில் அந்த இரண்டு நிறுவனங்களும் வருவதற்குண்டான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32. . . (குறுக்கீடு) சற்று இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத்தில், Parliament–ல் exclusively for Members–க்கு இருக்கின்ற Central Hall போல், அங்கத்தினர்கள் மட்டும் உட்கார்ந்து coffee சாப்பிடுகின்ற ஒரு வளாகத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டேன். ஏனென்றால் மற்ற இடங்களில் போய் உட்கார்ந்து பேசுவது சரியாக இல்லை என்று Central Hall போல் உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டேன். தாங்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, Committee Hall–ல் அதற்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றீர்கள். இப்போது நான் போய் பார்த்தேன். எனவே, MLAs சார்பில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அதனை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

32—

புதிய நியாய விலைக் கடை

***2228—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, தடிக்காரன்கோணம் ஊராட்சி, வீரப்புலி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?